[28th July 1962

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், அமைச்சர் அவர்கள் கூறுகின்ற பொழுது, 52 பஸ்களில் கண்ணுடிகள் உடைபட்டிருக்கின்றன என்று சொன்னுர்கள். அப்படியானுல் இப்போது ரிப்பேர் செய்யப்பட்டு எத்தனை பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன ? எத்தனை பஸ்கள் இன்னும் ரிப்பேர் செய்யப்படாமல் ஷெட்டில் நிற்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ரிப்பேர் செய்து கொண்டிருக்கிருர்கள், பல பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன, எத்தனை பஸ்கள் என்கிற விபரங்களுக்கு தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

பாகிஸ்தான் அகதிகள்

**731 கேள்வி.—திரு. புலவர் கா. கோவிந்தன் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) பாகிஸ்தான் அகதிகளாக வந்தவர்களில் தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் எத்தனை பேர் ?

(இ) இவர்களின் புனர்வாழ்விற்காகத் தமிழக அரசு அளித்திருக்கும் வசதிகள் யாவை ?

(உ) அவர்களுக்காகச் செலவிட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

(எ) அது மான்யமாக வழங்கப்பட்டதா, அல்லது கடனுக வழங்கப்பட்டதா ?

(ஐ) கடனுயின், இதுவரை திரும்பப் பெற்றது எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) About 1,526 persons.

(இ) The following loan facilities have been granted :—

(i) Business loan,
(ii) House loan, and
(iii) Educational loan.

(உ) Rs. 6,99,400.68 nP.

(எ) Repayable loan.

(ஐ) Rs. 2,12,436.10 nP.

New Universities

***732 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—**

(a) Whether any proposal was made to the Government of India, for opening a new University in Tamilnad;

(b) if so, the details thereof ; and

(c) the present stage of the proposal ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

28th July 1962]

(b) The Government of India have been addressed for financial assistance. The details of the proposed university will be worked out on hearing from Government of India.

(c) The reply from the Government of India is awaited.

திரு மீ. கலியாணசுந்தரம்: ஸார், மத்திய அரசாங்கத்தில் இதற்கான அனுமதியை கோரக்கூடிய நேரத்தில் இதற்கான ஒரு திட்டம் நிச்சயமாக அரசாங்கத்தினிடத்தில் இருந்திருக்கவேண்டும். ஆகவே எந்த மாதிரியான திட்டத்தை வைத்துக்கொண்டு அனுமதி கோரப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரு அஃபிலியேட்டிங் யூனிவர்ஸிட்டி ஆரம்பிக்கவேண்டும் என்று திட்டமிட்டிருந்தோம். யூனிட்டரி யூனிவர்ஸிட்டியாக தற்போது அமைக்க முடியாது. நமக்கு மேலும் எவ்வளவு பணம் கிடைக்கிறதோ அதற்குத் தகுந்தவாறு இது விரிவாக்கப்படும். இதற்காக யூனிவர்ஸிட்டி கிரான்ட் கமிஷன் இருக்கிறது. இவர்களையும் மத்திய அரசாங்க அமைச்சர் அவர்கள் கலந்து வேண்டியதை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இப்போதிருக்கும் சென்னை யூனிவர்ஸிட்டியை இரண்டாகப் பிரித்து ஒன்றை வேறு இடத்தில் வைக்கவேண்டும் என்றுதான் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். உண்மையிலேயே தனி யூனிவர்ஸிட்டியாகத்தான் இருக்கவேண்டும். இப்போதுள்ள சர்க்கார் திட்டப்படி இரண்டாக பிரிப்பது என்றால், இன்னொரு யூனிவர்ஸிட்டியின் தலைநகரம் எங்கேயிருக்கும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மதுரையில் இதன் தலைநகரம் இருக்கும் என்பதை முன்னாலும் சொல்லியிருக்கிறேன். இப்போதுள்ள நிலைமையில் அஃபிலியேட்டிங் யூனிவர்ஸிட்டியாக மதுரையில் ஏற்படுத்தப்படும். சென்னை யூனிவர்ஸிட்டியிலுள்ள ஒரு பகுதி அங்கே போய்விடும்.

திரு மீ. கலியாணசுந்தரம்: இதில் செனட்டின் அபிப்பிராயம் என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: செனட் சபை இதை ஒத்துக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. சின்டிகேட் இதைப்பற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை.

திரு. கே. எஸ். அப்துல் அஜீஸ்: பெரியகுளம், கோடைக்கானல், நிலக்கோட்டை, திண்டுக்கல் தாலுகாக்களுக்கு மத்தியமாக இருக்கக்கூடிய வத்தலக்குண்டில் ஒரு அரசாங்க கல்லூரி ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

[28th July 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது யூனிவர்ஸிட்டியைப் பற்றிய கேள்வி. கல்லூரிகளை ஏற்படுத்துவதற்கு கனம் அங்கத்தினர்களைப் போன்றவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டால் அரசாங்கம் என்னென்ன உதவியைச் செய்யவேண்டுமோ அதை செய்யும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு வை. சங்கரன் : செனட்டிலிருந்து 'இன்னொரு யூனிவர்சிடி வேண்டியது இல்லை' என்று அபிப்பிராயம் தெரிவித்ததன் காரணம் இன்னொரு சர்வகலாசாலை ஏற்படுவதால் தங்களுடைய சொந்த ஆதிக்கம் **(area of jurisdiction)** குறைந்து விடும் என்று நினைத்துத்தான் இப்படியெல்லாம் சொல்லப்படுகின்றதே, அதை அறிந்துகொண்டு இந்த சர்க்கார் அவர்கள் அபிப்பிராயத்தைப் புறக்கணித்து விடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி நினைப்பதற்கே இடமில்லை. மதுரையிலே ஒரு யூனிவர்சிடி வைப்பது என்றுதான் இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கு சென்னை யூனிவர்சிடி ஒன்றும் ஆட்சேபணை தெரிவிக்காது என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த புதிய யூனிவர்சிடி எந்த ஆண்டிலிருந்து தொடங்கலாம் என்று அரசாங்கம் எதிர் பார்க்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதன் முதலிலே கன்சீவ் ஆகவேண்டும். அப்படி கன்சீவ் ஆகிய பிறகு, 9 அல்லது 10 மாதம் ஆகும்போதே பெரிய பெரிய டாக்டர்கள் சொல்வது தவறி விடுகின்றது. ஆகவே, யூனிவர்சிடியைப் பொறுத்த வரையில் எப்போது ஏற்படும் என்று நான் இப்போதே சொல்வதற்கில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து இது உண்மையிலேயே கன்சீவ் ஆயிற்று என்பதே சந்தேகமாக இருக்கிறது. அப்படி கன்சீவ் ஆகி இதனால் குழந்தை பிறக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கன்சீவ் ஆகிவிட்டது. அதிலே ஒன்றும் சந்தேகம் வேண்டியதில்லை.

* 733 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to start a University at Madurai during the Third Five-year Plan period; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) and (*b*) There is a proposal to start a University at Madurai. The Government of India have been addressed for financial aid and their **reply is** awaited.